**செ.வெ.எண்: 06** **நாள்: 02.02.2017**

# விராலிமலை சட்டமன்ற தொகுதியில் ரூ.56 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட சமுதாய கூடத்தினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் திறந்து வைத்தார்

புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் பேரூராட்சி, வார்டு எண்:15, கோட்டை தெருவில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் புதிதாக கட்டப்பட்ட சமுதாயக்கூடத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர் திரு.பி.கே.வைரமுத்து அவர்கள் முன்னிலையில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்த புதிதாக கட்டப்பட்ட சமுதாயக்கூடத்தினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் அவர்கள் திறந்து வைத்து பேசியதாவது.

தமிழகஅரசு பொது மக்களின் அடிப்படை தேவைகளை நிறைவேற்றும் வகையில் பல்வேறு நலத்திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் இலுப்பூர் பேரூராட்சியில் 15 வது வார்டு கோட்டை தெருவில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ்ரூ.56 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட சமுதாயக்கூடம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இச்சமுதாயக்கூடம் 3600 ச.அடி பரப்பளவிலும், 1800 ச.அடி உள் பரப்பளவிலும், மணமகன் அறை, மணமகள் அறை மற்றும் மேடை அமைக்கப்பட்டுள்ளது. இக்கட்டிடத்தில் ஒரே நேரத்தில் 300 நபர்கள் அமர்ந்து கொள்ளலாம்.

மேலும், தனியார் திருமண மண்டபங்களில் சுபநிகழ்ச்சிகள் நடத்த இயலாமல் ஏழை, எளிய மக்கள் சிரமப்படுவதை கருத்திற்கொண்டும், பேரூராட்சியில் நிதிநிலையினை மேம்படுத்தும் நோக்கத்திலும் இந்த புதிய சமுதாயக்கூடமானது கட்டப்பட்டுள்ளது. இதன் மூலம் இந்த பகுதியை சுற்றியுள்ள 50 கிராமங்களில் உள்ள ஏழை, எளிய பொது மக்கள் தங்களது இல்லங்களில் நடைபெறும் பல்வேறு சுப நிகழ்ச்சிகளை குறைந்த கட்டணத்தில் நடத்தி பயன்பெற முடியும். இப்பகுதி பொது மக்களின் அடிப்படை தேவைகளான குடிநீர் வசதி, பேருந்து வசதி, சாலை வசதி உள்ளிட்ட பல்வேறு அடிப்படை வசதிகள் நிறைவேற்றப்பட்டுள்ளது. எனவே தமிழக அரசின் இத்தகைய நலத்திட்ட உதவிகளை பெறும் அனைவரும் இதனை உரிய முறையில் பெற்று பயன்பெற வேண்டும் என்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.பி.ஆறுமுகம், மாவட்ட கூட்டுறவு ஒன்றிங்களின் தலைவர் திரு.சின்னதம்பி, முன்னாள் பேரூராட்சித்தலைவர் (இலுப்பூர்) திரு.குருபாபு, கூட்டுறவு சங்கத் தலைவர் திரு.ராமசாமி, ஆத்மாக்குழுத் தலைவர் திரு.சாம்பசிவம், பேரூராட்சி செயல் அலுவலர் திரு.சுலைமான்சேட், கூட்டுறவு சங்கத்தலைவர்கள், முன்னாள் உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**